**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 100/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | உமா மகேஸ்வரி |
| Father’s /Husband Name | : | ரவிச்சந்திரன் |
| Village | : | வடகண்டம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 46 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. A1,A2 present. A3 absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில்லா எதிரி வெங்கடேசன் என்பவரையும் எனக்கு தெரியாது. சுமார் 1 வருடம் முன்பாக தேதி, மாதம் நியாபகமில்லை. ஒரு நாள் மதியம் சுமார் 02.30 மணியளவில் எனக்கு சொந்தமான இரண்டு ஆடுகள் மேய்ந்து விட்டு எனது வீட்டு வாசலில் படுத்திருந்தது. பின்னர், ஒரு மணி நேரம் கழித்து நான் எனது வீட்டு வாசலிற்கு சென்று ஆடுகளை பார்த்த போது ஆடுகள் அங்கு இல்லை. நான் எங்கு தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் விசாரித்தும் எனக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை. பின்னர் இரண்டு நாட்கள் கழித்து நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் மூன்று மாதம் கழித்து நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து காணாமல் போன எனது ஆட்டினை பெற்றுக்கொண்டேன்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக பகுதியாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

புதுக்குடியை சேர்ந்த 1 வது எதிரியான ஆசிக் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 30.09.2024 ம் தேதியன்று எனக்கு சொந்தமான ஏழு ஆடுகள் மேய்ந்தது என்றும், அதில் ஒரு ஆடு காணாமல் போய்விட்டது என்றும், மறுநாள் 01.10.2024 ம் தேதியன்று எனது ஆடுகளை எனது வீட்டின் அருகிலேயே மேய விட்டேன் என்றும், அதை நான் மறைந்து இருந்து கண்காணித்தேன் என்றும், அப்போது சுமார் மதியம் 01.00 மணியளவில் ஒரு இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள் என்றும், அதில் ஆசிக் என்பவர் எனது ஆட்டை தூக்கிக் கொண்டார் என்றும், மற்ற இரண்டு நபர்கள் இரு சக்கர வாகனத்தில் தப்பிப்பதற்கு தயார் நிலையில் இருந்தார்கள் என்றும், நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் நான் 1 ஆவது எதிரியின் பெயரை குறிபிட்டு புகார் மனுவில் சொல்லவில்லை என்றும், ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை** :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:43:21 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.